சுருக்கம்

பள்ளிக் கல்வி – மெட்ரிகுலேசன்/மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளில் எல்.கே.ஜி/யு.கே.ஜி. வகுப்புகள் துவக்க அனுமதி மற்றும் அங்கீகாரம் வழங்குவதற்குரிய வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித்.(எக்ஸ்.2)துறை

அரசாணை (நிலை) எண்: 250 நாள் : 17.12.2008

படிக்கப்பட்டவை:

1. அரசாணை நிலை எண்.54, பள்ளிக் கல்வி, நாள் 30.4.02
2. அரசாணை நிலை எண்.48, பள்ளிக் கல்வி, நாள் 21.7.04
3. அரசாணை நிலை எண்.85, பள்ளிக் கல்வி, நாள் 1.6.2006
4. அரசாணை நிலை எண்.148, பள்ளிக் கல்வி, நாள் 28.8.2006
5. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் கடித எண்.1122/D1/2007, நாள் 6.3.2007,14.8.2007 மற்றும் 5.11.08.

***

மெட்ரிகுலேசன்/மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகட்கான அனுமதி / அங்கீகாரம் வழங்குதல் என்பது மெட்ரிகுலேசன் பள்ளிகட்கான ஒழுங்குப்படுத்தும் விதித் தொகுப்பு மற்றும் மேலே 1 மற்றும் 2ல் படிக்கப்பட்ட அரசாணைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டு மெட்ரிகுலேசன்/மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகட்கான அங்கீகாரம் 1–10 அல்லது 1–12 வகுப்புகட்கு வழங்கப்பட்டு வருகிறது..ஆனால் நடைமுறையில் அனைத்து மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளிலும் எல்.கே.ஜி மற்றும் யு.கே.ஜி வகுப்புகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றிற்கு இதுவரை துறை அங்கீகாரம் ஏதும் அளிக்கவில்லை. ஆனால் இப்பள்ளிகளுக்கு ஒன்று முதாலான வகுப்புகளுக்கு அங்கீகாரம் வழங்கும்போது எல்.கே.ஜி, யு,.கே,ஜி மாணவர்கள் எண்ணிக்கையையும் கணக்கில் கொண்டே கட்டிட உறுதிச் சான்று பரிசீலிக்கப்பட்டு அங்கீகாரம் வழங்கப்படுகிறது. எனவே மெட்ரிகுலேசன்/மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படுகின்ற எல்கேஜி/ யுகேஜி வகுப்புகட்கும் அனுமதி / அங்கீகாரம் வழங்கலாம் என்றும் அது குறித்து நிர்ணயிப்படவேண்டிய வரையறைகளையும் மெட்ரிகுலேசன் பள்ளி இயக்குநர் மேலே 5ல் படிக்கப்பட்ட கடிதங்களில் அரசுக்கு பரிந்துரை செய்திருந்தார்.

த.பி.பா.